**செ.வெ.எண்:31** **நாள்:14.10.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் KMS 2020-2021 -ஆம் ஆண்டில் குறுவை சாகுபடி பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு, விவசாயிகள் பயன்பெறும் வகையில், இரண்டாம் கட்டமாக அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், காமரசவல்லி மற்றும் மஞ்சமேடு கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், செந்துறை வட்டம், சன்னாசிநல்லூர் கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையமும், உடையார்பாளையம் வட்டம், இடங்கன்னி மற்றும் காரைக்குறிச்சி கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், 16.10.2020 முதல் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட காமரசவல்லி, மஞ்சமேடு, சன்னாசிநல்லூர், இடங்கன்னி மற்றும் காரைக்குறிச்சி கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 16.10.2020 முதல் பயன்பாட்டிற்கு வர உள்ளது. எனவே, அருகில் உள்ள விவசாய பெருமக்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**